உ

இட்டலிங்காய நம



வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வாழ்விடமாகவும் பிரான்சில் வசித்துவந்தவருமாகிய

அமரர்

## திருமதி நாகேஸ்வரி அம்மா உருத்திரமூர்த்திக் குருக்கள்

அவர்களின்

# நாகேஸ் மலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

இட்டலிங்காய நம



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும்,

அளவெட்டியை வசிப்பிடமாகவும்

கொண்ட

***அமரர்***

***நாகேஸ்வரிஅம்மா உருத்திரமூர்த்திக் குருக்கள்***

அவர்களின்

சிவபதப் பேறு குறித்து வெளியிடப்பட்ட

# "நினைவுமலர்"

**04.10.2020**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எம்மேல் அன்பு செய்து ஆளாக்கி

வழிகாட்டி உயர்வித்து

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து

வானுறையும் தெய்வமாகிவிட்ட

எமது அன்னையின் பாதக்கமலங்களில்

இம் மலரைச்

சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



அன்னை மடியில்
1943.07.31

ஆண்டவன் அடியில்
2020.09.14

அமரர்

# திருமதி நாகேஸ்வரி அம்மா
# உருத்திரமூர்த்திக் குருக்கள்

அவர்களின்

ஐக்கிய வெண்பா

ஆண்டு சர்வாரி ஆவணித்திங்கள் இருபத்தொன்பதில்
பூண்ட அபரபக்க துவாதசி திதி ஆயிலியத்தில்
மாண்ட புகழ் நாகேஸ்வரி என்னும் மாதரசி
நீண்ட நிறைவாழ்வு விட்டு எய்தினார் பரமபதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

<u>பஞ்சபுராணம்</u>



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சம் துறப்பிபாய் நீ
இப்பொன் நீ இம்மணீ நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கலைகடம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினும் நல்ல
முக்கணான் உறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர் முறையோத்
தலைகடல் முழங்கும் அந்தண்நீர்க் கனந்தை
அணிதிகழ் ஆதித்தேச்ச ரமே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநி பாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## அபிராமி அந்தாதி

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன வெல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோக்ஷதீபப் பாடல்கள்

(சீவாத்மாவாகிய சோதி பரமாத்மாவாகிய சோதியுடன் கலக்கின்றது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு நெய்த் தீபம் ஏந்தி அத்தீபத்தை ஆலயத்திற் சேர்க்கும் போது பாடப்படுவது)

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை யம்பலத்தாடுகின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே.

### சீடன்

மாட்சிசேர் கைலை வாழும்
மாமறைச் சிவனே வந்து
சாட்சியாய் குருவாய் லிங்க
சங்கமன் தானே யாகும்
தாழ்ச்சியொன் றில்லா வீர
சமய மெய் முத்தி பெற்ற
மோட்ச தீபத்தின் செய்தி
முறைமையாய் உரைசெய்வோமே.

### குரு

ஆரடா? இருள் லிங்கே
அருள்புரி பெரிய செம்பொன்
சீர்பெறு ஞான வாயில்
திகழ் கயி லாயம் வந்தே
பேர் பெறு பாச மென்னும்
பெரிய நற் கபாடமுன்பு
நீரினி வந்த செய்தி
நேர்மையா யுரைசெய் வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீடன்

வேதன் மால் தேடிக் காணா
விண்ணவர்க் கரசே உன்றன்
பாதமே போற்றி செய்யப்
பரிவுடனடிமை வந்தேன
போதகப் பொருளே! யான்செய்
பிழை பொறுத் தருள்புரிந்து
பாதகமனைத்தும் தீர்த்துப்
பரகதி யருளு வாயே.

## குரு

அருளுவா யென்று கூறும்
அப்பனே! யறையக் கேளாய்
பொருள்களோ டன்றி மற்றும்
பூஷண வகைகள் கொண்டு
இருளறை யெதிரே வந்திங்
கிணையடி தன்னைப் போற்றி
அருள் பெற வந்த செய்தி
அடைவுட னுரை செய்வாயே.

## சீடன்

துன்னுகல் லெறியும் வில்லின்
அடியொடு உதையுமன் பால்
மன்னிட ஏற்ற ஆண்ட
மாண்பினை யடிமை யெண்ணி
மன்னவர் விண்ணோர் போற்றும்
மலையக வாசல் நிற்கும்
என்னை நின்பத நிழற் கீழ்
இருத்தி யாட் கொள்ளுவாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு

"ஆ" ளென்று சொல்லு கின்ற
அன்பனே அகமகிழ்ந்தேன்
சூழ்கின்ற நினது மாயத்
தோடரறுத் தடிமை கொள்ள
வான் கொண்ட நந்தி போற்றும்
வானுயர் கபாடந் தன்னில்
தாள் வின்றி வெண்ணை வாங்கித்
தமையுடன் வீசு வாயே.

## சீடன்

வீசுவாய் வெண்ணெ யென்று
விமலனா ருரைத்த போது
பாசமா யைக ளறுத்துப்
பாதமலர் அடைய வந்தேன்
நேசமா யாடிப் பாடி
நெறியுடன் வெண்ணெய் வாய்கி
ஆசிலாகட கபாடம் தன்னில்
அன்புடன் வீசினேனே

## சிவம்

வந்து முன்னிற்கு மன்பன்
வருந்திடா வண்ண மின்னே
நந்தி நீ சென்று கண்டு
நன் மொழி பலவியம்பி
மைந்தனே! மனவரங் கேள்
வருகவென வரவழைத்துக் கொண்டு
சிந்தை யார்வத்தி னோடென்
திருப்பத மடைவிப்பாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீடன்

எறிந்தனன் ஈசா! அன்பால்
ஏத்துவார் ஞத்தி சார்தல்
அறிந்து நற் பிரணலிங்க
பூசணையன் போடாற்றிப்
பிறிதொரு பொருளு மெண்ணாப்
பேரின்ப வாழ்வின் மூழ்கி
செறிந்து வந்தடைந் தேனுன்றன்
திருவடி நல்குவாயே.

## வேறு

என்று நற்புதல்வன் கூறி
இறையவன் மனமகிழ்ந்து
நன்றென நகைத்தென் பாதம்
நாமுமக் களிப்போமென்று
குன்றினிற் கணத்தை நோக்கிக்
கூட்டிவாவென்று கூற
சென்றவா வரவழைத்துச்
சிவபத முய்ப்பித்தாரே.

## சிவன்

உய்த்தலு முமையோர் பாகன்
உகந்தடியவன் நொக்கி
எத்தனை குற்றமேனு
மெனதடி யவர்கள் செய்யின்
அத்தகு குற்ற மெல்லா
மன்பெனும் மலரே யாகும்
சித்த நீ வருந்தல் வேண்டாம்
திருப்பதம் நல்கினேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரணம் (சீடன்)

ஆராதனை செய்யடியார் சரணம்
அருள் சேர்முக மாறுடையாய் சரணம்
பாரோர் புகழும் பரனே சரணம்
பவதக்கன் வீழ்படையாய் சரணம்
தீராதிரு நேத்திரனே சரணம்
சிவ ரங்கமாகள் தேவா சரணம்
வீராசம நூல் வீஜயா சரணம்
வீரேசுரனே சரணம்! சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை முருகையா



தாய் மாங்கயற்கரசி



கணவருடன்



ரவிவன்மனின்60வது பிறந்ததின நிகழ்வில்



பேர்த்தி மதுமிதாவின் பூப்புனிதநீராட்டு விழாவில்



இறுதியாக கொண்டாடிய பிறந்த தின நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம்

இட்ட லிங்காய நம:

# அமரர் சென்ற பாதையின் தடையங்கள்.... எம் நினைவலைகளில்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த திரு முருகையாவிற்கும் வண்ணார்பண்ணை நாவலர் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட முத்தம்மா என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் மங்கையற்கரசி அம்மையாருக்கும் ஏற்பட்ட திருமண பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற நற் பலனாக அவர்களது சிரேஷ்ட புதல்வியாக 31.07.1943ம் ஆண்டில் நாகேஸ்வரி அம்மா பிறந்தார்.

அம்மா தனக்குப் பின் பிறந்த தனது இளைய சகோதரர்களான கதிர்காமநாதன், சத்தியேஸ்வரி, காலஞ் சென்றவர்களான கமலநாதன், பராசக்தி, சிவநாதன் என்பவர்களுடன் மிகவும் மகிழ்வுடன் கூடி வாழ்ந்து வந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை பரமேஸ்வராக் கல்லூரியிலும் அதன் பின் வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலையிலும் கற்றார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நல்லறிவுடன் அழகும் மிளிரப் பெற்று வளர்ந்து திருமணப் பருவம் எய்திய நாகேஸ்வரிக்கு பெற்றோர்கள் உரிய காலத்தில் திருணம் செய்து வைக்க எண்ணினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அளவெட்டி வடக்கைச் சேர்ந்தவரும் முருகையா என பெற்றோர் உற்றோரால் அழைக்கப்பட்டவரும் கந்தையா, செல்லாச்சி தம்பதியினரின் இரண்டாவது புத்திரனான உருத்திரமூர்த்தி ஐயா என்பவரை இவரது பெற்றோர்கள் 1957ம் ஆண்டு கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் வைத்துத் திருமணம் செய்து வைத்தனர்.

இவர்களது இனிய இல்லற வாழ்வின் பெறுபேறாக ரவிவர்மன், பரந்தாமன், ஜெயக்குமார், அருந்தவகுமார், ஜீவசங்கர், சுகாஜனன் என ஆறு புதல்வர்களைப் பெற்றெடுத்ததுடன் அருமைப் புதல்வியாக பிரேமகி யையும் பெற்று சீராட்டி வளர்த்து வந்தார்.

நாகேஸ்வரி அம்மா தனது . வாழ்க்கைப் பயணத்தை தனது கணவர், பிள்ளைகளுடன் அளவெட்டிப் பகுதியில் தொடர்ந்தார்.

அளவெட்டி (கோயில்வளவு) ஐயனார் கோவிலடியில் சிலகாலமும், மல்லாகம் குடியேற்றத் திட்டத்தில் சிலகாலமும் வாழ்ந்து, அளவெட்டி வடக்கில் ஆதி வீரபத்திரர் கோயிலடியில் தொடர்ந்து வாழ்ந்து வந்தனர். வீரபத்திரருக்கு வேண்டிய நித்திய நைமித்திய பணிகளைக் கணவருக்கு உதவியாக செவ்வனே செய்து இல்லத்தரசியாக வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில் பிரான்ஸ் நாட்டில் இவரின் மூன்றாவது மகனின் மனைவியின் பிரிவால் துயருற்றிருந்த ஜெயக்குமாரையும் அவரின் குழந்தையையும் நினைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் வருத்தமுற்றார். எனவே அக் குழந்தையைப் பராமரிப்பதன் பொருட்டு பிரான்ஸ் செல்ல முடிவெடுத்து அங்கு சென்றார். பிரான்ஸில் தன் இரண்டு பிள்ளைகளான ரவி, ஜெயா ஆகியோருடனும், அருமை மகள் பிரேமாவுடனும், பேரப்பிள்ளைகளுடனும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்.

இந்த வேளையில் 2011ம் ஆண்டு இளைய மகன் சுகாஜனனின் திருமணத்திற்கு இலங்கை வந்து கலந்து கொண்டு மகிழ்ந்தார். 2015ம் ஆண்டளவில் பேர்த்தி மதுமிதாவின் பூப்புனித நீராட்டு விழாவை இலங்கையில் எல்லோருடனும் சேர்ந்து கொண்டாடுவதன் பொருட்டு மகன், மகள், பேரப்பிள்ளைகளுடன் யாழ்ப்பாணம் வந்து மற்றப் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளிடம் மிகவும் சந்தோஷமாக அளவளாவிச் சென்றுள்ளார். இதுவே அவரது இலங்கை கடைசிப் பிரயாணம் என யாரும் எதிர்பார்க்கவில்லை.

**இவரது பிள்ளைகளின் வாழ்வுச் சிறப்புகள்**

நாகேஸ்வரி அம்மாவின் மூத்தமகனாகிய பிரான்ஸ் நாட்டில் வசித்துவரும் ரவிவர்மனுக்கு தவலக்ஷ்மி என்னும் கன்னிகையை மணம் செய்து கொடுத்ததன் பேறாக தர்ஷன், வர்மினி, வர்மன், தர்சினி என்ற பெயருடைய பேரப்பிள்ளை களைப் பெற்று ஆனந்தமடைந்தார்.

இவரது மகனாகிய பரந்தாமன் உடல் நலம் குன்றியவர். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அவர் காணாமல் போய்விட்டார். அம்மா அவரை எங்கு தேடியும் காணாமல் மிகவும் மனம் வருந்தியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் நாட்டில் வசித்துவரும் ஜெயக்குமார் என்ற தனது மூன்றாவது மகனுக்கு தனது சொந்த மருமகளான உமாதேவியை மணம் செய்து தனுஜா என்ற பேரப்பிள்ளையைப் பெற்று மகிழ்ந்தார். எனினும் விதியின் வசத்தால் மருமகள் உமாவின் இழப்பால் மிகவும் துயரமடைந்ததுடன் பேரப்பிள்ளையின் நினைவும் அவரை வாட்டியது. தனுஜாவை தானே வளர்த்தெடுப்பதற்காகத் துணிந்து பிரான்ஸ் நாட்டைச் சென்றடைந்தார். மகனுக்கு சித்திரலேகா என்ற மங்கையை விவாகம் செய்ததன் பேறாக சித்திரகுமார் என்ற பேரனையும் பெற்று தனுஜாவுடன் சேர்த்து சீராட்டி வளர்த்து வரலானார்.

தனது அருமை மகளான பிரான்ஸ் நாட்டில் வாழும் பிரேமா என அன்பாக அழைக்கப்படும் பிரேமகிக்கு இல்வாழ்க்கைத் துணையாக தனது சொந்த மருமகனான ரமேஸ்வரனைத் திருமணம் செய்து கொடுத்தார். அவர்கள் பெற்றெடுத்த அனுஷன், லக்ஷன், நிருஷன் என்ற மூன்று பேரன்களை சீராட்டி மகிழ்ந்தார்.

கண்ணன் என்று அன்புடன் அழைக்கப்படும் அருந்தவகுமார் என்ற மகனுக்கு தனது மருமகள் உமாவின் சகோதரியான ரதி என்று அழைக்கப்படும் மருமகள் சிவரஞ்சனியை மணம் செய்து கமலாபாதன், ரகுப்பிரியன் என்ற பேரன்களைப் பெற்று மகிழ்ந்தார்.

இவரது ஆறாவது புத்திரனாகிய ஜீவசங்கர் இளவயதிலேயே உறவினராகிய செந்தினியை விரும்பியத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் அவர்களுக்கு விவாகம் செய்து வைத்தார். இவர்களது இல்வாழ்வின் பேறாக கஜீவா, கஜீவிதன், சஞ்சீவிதன், மதுமிதா என்ற பேரப்பிள்ளைகளைப் பெற்று மனமகிழ்ந்தார்.

ஜீவசங்கர் இளவயதிலேயே தனது தந்தையாருடன் இணைந்து அவரது விருப்பத்திற்கிணங்க குல வழக்கப்படி சிவலிங்கதாரணம் செய்து குருப்பட்டம் தரித்து சிவஸ்ரீ ஜீவசங்கர் குருக்கள் என்ற பெயருடன் தங்களது குல தெய்வமாகிய அளவெட்டி வடக்கு அருள்மிகு ஆதி வீரபத்திரர் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்து பூஜைக் கிரமங்களை ஆற்றி வருகிறார். 1999ம் ஆண்டு தந்தையார் சிவப்பேறு பெற்றதன் பின்னர் அவரது சமாதிக் கிரியைகளை செவ்வனே நிறைவேற்றி தமது கடமைகளை ஈடேற்றி வருகிறார்.

அம்மாவிற்கு ஜீவசங்கர் குருக்கள் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்று திறம்படச் செய்து வருவதனால் அளப்பரிய சந்தோஷமும் பெருமையும் கொண்டிருந்தார்.

ஜனா என்று அழைக்கப்படும் அம்மாவின் கடைக் குட்டிப் பிள்ளையான சுகாஜனன் பெற்றோரின் விருப்பத்திற் கிணங்க படிப்பில் மிகவும் கவனம் செலுத்தியதுடன் பல்கலைக் கழகம் வரை சென்று B.A (Hons) பட்டம் பெற்றதுடன் கல்வி டிப்ளோமா பட்டம், M.A பட்டமும் பெற்று தன் குடும்பத்திற்கும் பெருமை சேர்த்துக் கொடுத்ததினால் அம்மா மிகவும் பெருமை பெற்றிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது ஜனா அபிவிருத்தி உத்தியோகத்தராக வடமாகாண ஆளுநர் செயலகத்தில் கடமையாற்றி வருகிறார்.

இவர் தனது கடைசி மகன் ஜனாவிற்கு சியாமளா என்னும் பெயருடைய மங்கையை கரம்பிடித்துக் கொடுத்து இல்வாழ்வின் பேறாக தர்மிகா என்ற பேர்த்தியைப் பெற்று மிகவும் மனமகிழ்ச்சியுற்றார்.

நாகேஸ்வரி அம்மாவிற்கு தான் பெற்றெடுத்த எல்லாப் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் சகல ஐஸ்வரியங் களுடனும், சீரும் சிறப்புடன் வளமாக வாழ்ந்து வருகின்றனர் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

இந் நிலையில் ஜீவசங்கரின் மகனாகிய கஜீவிதன் உறவினராகிய ஹம்ஸாயினியை திருமணம் செய்து அட்ஷரா என்ற குழந்தையைப் பெற்றதன் காரணமாக பேர்த்தியார் என்ற ஸ்தானத்திலிருந்து பூட்டியார் என்ற பெரையும் பெற்றதனால் மேலும் அளப்பரிய சந்தோசமடைந்திருந்தார்.

இவர் தனது இறுதிக் காலத்தை தனது சொந்த ஊரில் வாழவும் தனது குலதெய்வமாகிய வீரபத்திரர் சந்நிதியில் கழிக்கவும் விருப்பமுடையவராயிருந்தார். எனவே அம்மாவின் இறுதி ஆசையையும் நிறைவேற்றி வைக்கும் பொருட்டு பிரான்ஸில் உள்ள மூன்று பிள்ளைகளும் விருப்பமுடை யவராக இருந்தார்கள். எனினும் உலக ஒழுங்கையே புரட்டிப் போட்ட கொரோனா வைரஸ் அதற்கு இடம் கொடுக்க வில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்நிலையில் விதி யாரைத்தான் விட்டு வைத்தது. அம்மாவின் உடல் நலத்தில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி யது பிள்ளைகள் அவரை வைத்தியசாலையில் சேர்த்துப் பராமரித்து வந்தார்கள். இருப்பினும் உடல் நிலையில் மாற்றங்கள் குறைந்து கொண்டே செல்லத் தொடங்கியது. யாழ்ப்பாணத்திலுள்ள பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் மனங்கலங்கி அவருடன் தொலைபேசியில் உரையாடியுள் ளார்கள்.

எல்லோருடனும் உரையாடிப் பார்த்த மனநிறைவோடு அம்மாவின் சுவாசம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து அடங்கி 14.09.2020 பி.ப 1.45 மணியளவில் இவ்வுலக வாழ்க்கைப் பயணத்திலிருந்து.......

தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவனின் தாளே... தலைவனின் தாளே.....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி வீரசைவத்திரு நாகேஸ்வரி ருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்களது ஆத்மஸாந்தியுரை

அளவையூர் பதியில் கோவில் கொண்டு எழுந்தருளி நல்லருளாட்சி புரியும் ஆதிசிவன் வீரபத்திரசுவாமி தேவஸ்தான அறங்காவல் பரம்பரை பரம்பரையாக வந்துதித்த வீரசைவத் திருமா மணிகளாவார்கள் சிவபூமியில் கலைஞானம் பெற்றவர்கள் வீரசைவத்தின் மகிமையால் வரலாறு படைத்த சான்றோர்கள் வாழ்ந்த இடம் அளவையம்பதி பன்னாலையம் பதி கீரிமலைப்பதி மாவையம்பதியாக வீரசைவர்கள் வாழ்ந்த காலங்களில் மிகத் தொன்மையான காலம் வீரசைவத் துறவியாகவும் வேத விற்பன்னர்களாகவும் வேள்வித் தீயில் யாகாதிகளாகவும் வித்தியாதரர்களாகவும் கீரிமலை மடங்கள் இருந்த காலத்தில் வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு ஆசாரசீலத்துடன் வாழ்ந்து வழிகாட்டிய தெய்வமானவர்கள் வீரசைவர்கள் மாருதப்புரவல்லி காலத்தில் கேரளந்தூர் வீரசைவத் துறவிகளும் வாழ்ந்து வந்த இடங்கள் சிவபுண்ணிய பூமியாகும்.

அவ்வழியில் நாகேஸ்வரி அவர்கள் உருத்திரமூர்த்திக் குருக்கள் அவர்களை திருமணம் பூண்டு இல்வாழ்க்கையின் நற்பயனாக குருபாதம் பணிந்து நல்லறத்தின் கண்ணே ஏழு ஆதாரங்களாக எழுவரை மழலைச் செல்வங்களாக பாராட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராட்டி அறுசுவையூட்டி வளர்த்தெடுத்த மாதரசி நாகேஸ்வரியம்மையார் ஆவார். தமது இல்லற வாழ்வில் நல்லறத்தின் கண்ணே மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை என கண்குளிர கண்டுகளித்து சிவபதம் எனும் பேற்றில் சிவலோக சாய்யுச்சமாகினார், அமரத்துவம் எய்தினார், இல்லற களிப்புடன் ஆத்ம ஸாந்தியானார்.

அன்னார் செய்த மாதவத்தின் பயனாக பிள்ளைச் செல்வங்கள் தாம் பிறந்த தாய் நாட்டிலும் வெளியூரிலும் வீரசைவர்களாக வீற்றிருந்து மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகலாம் என்பதற்கமைய வீரசைவத் திருமாமணி களாக செவ்வனே சேவையாற்றி வருகின்றார். ஆதலால் வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற

திருவள்ளுவர் நல் ஆசியுடன் நாகேஸ்வரியம்மையாரின் ஆத்ம ஸாந்தியில் கலந்து சிறப்பித்து எல்லாம் வல்லானைப் பணிந்து பிரார்த்தனை செய்கின்றோம். ஓம் ஸாந்தி ஸாந்தி ஸாந்தி

வந்தே மாதரம்

**அன்பர் ஷர்மாஜி**

**வாஸ்தவ நிபுணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அக்கா.......

நாங்கள் சிறுவயதில் உங்களை
பள்ளியக்கா என்னுதான் கூப்பிடுவோம்
எங்களைப் பாடசாலைக்கு வெளிக்கிடுத்தி
சாப்பாடு தயார்பண்ணி
பாடசாலைக்கு அழைத்துச் செல்வது நீங்கள் தான்
அதனால்தான் என்னவோ பள்ளியக்கா
என்று அழைத்தோம்

எங்கள் மீது அன்பு காட்டினீர்கள்
நாங்கள் கவலைப்படும் போது எங்களுக்கு
ஆறுதல் வார்த்தைகள் கூறி
அமைதியடையச் செய்வீர்கள்

எனக்கு சகோதரர்கள் இல்லை என்று
கவலைப்படக்கூடாது என்று
உங்கள் பிள்ளைகளை என்னுடன்
அன்பாக இருக்கும்படி அறிவுத்தினீர்கள்

நான் திருமணம் செய்து வந்தபின்பு
எனது மனைவி சுதாவையும் ஒரு சகோதரிபோல்
நேசித்தீர்கள்.

உங்களது திறமை, ஆளுமை, தன்நம்பிக்கை, துணிவு
யாருக்கும் வராது
தனி மனிசியாக இருந்து மிகவும் சிரமப்பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டு வந்தீர்கள்
நீங்கள் பரிஸ்சிற்கு வந்த பின்பு அடிக்கடி நாங்கள்
வருவது வழக்கமாகிவிட்டது.

நான்கு வருடங்களுக்கு முன்பு
ஓர் திருமணத்திற்கு வந்தபோது
உங்கள் வீட்டில் உணவு உண்டது
இன்றும் மறக்க முடியவில்லை.

உங்களுக்கு அண்மைக்காலத்தில் அடிக்கடி
சுகயீனம் வருவதும் வைத்தியசாலைக்குச்
சென்று மூன்று நான்கு நாட்களில்
திரும்புவதும் வழமையானது என்று நினைத்தோம்.

ஆனால் இம்முறை நீங்கள் திரும்பவே இல்லை
போதும் இந்தப் பயணம் என்று நிம்மதியாகத்
தூங்கிவிட்டீர்கள்.

போய் வாருங்கள் அக்கா
போய் வாருங்கள்
வழக்கப் போல் உங்கள் தம்பியும்
தம்பியின் மனைவி சுதாவும் உங்கள்
பிள்ளைகளைப் பாதுகாப்போம்.

போய் வாருங்கள்
பள்ளியக்கா போய் வாருங்கள்

**மு.கதிர்காமநாதன்**

**(சகோதரன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத் தங்கையின் உள்ளக் குமுறல்....

அக்கா அம்மாவிற்கு மூத்த மகளாப் பிறந்தீர்கள். உங்களிற்குப் பின்பு பிறந்த சகோதரர்களாகிய எங்களை பாசத்துடன் அணைத்து குளிப்பாட்டி ஆடை அணிவித்து, சோறூட்டி, அம்மாவிற்கு உறுதுணையா வளர்த்து வந்தீர்கள் அக்கா....

இளவயதில் நீங்கள் திருமணம் செய்தாலும் கணவருடன் அன்புடன் வாழ்ந்து ஏழு குழந்தைச் செல்வங்களைப் பெற்று வளர்த்த மகராசி நீங்கள் அக்கா....

உறவினர்களுடனும், நண்பர்களுடனும் அன்புடனும் மரியாதையுடனும், பண்புடனும், பழகுவீர்களே. உங்களை இழந்து தவிக்கிறோம் அக்கா....

நீங்கள் இவ்வுலகத்தைவிட்டு, உங்கள் அன்புப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை, சகோதர சகோதரியை விட்டுப் பிரிந்து சென்றாலும் எங்கள் நினைவுகளில் நீங்காது நிலைத்து இருப்பீர்கள் அக்கா....

**உங்கள் பிரிவால் வாடும்**

**அன்புத் தங்கை பவளம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மகன் ரவியின் நினைவுகள்...

அம்மா.....

உங்கள் மூத்த மகனாகப் பிறந்து உங்களை அம்மா என அழைத்து மழலை மொழி பேசி உங்கள் மடியில் தவழ்ந்த பெருமையை முதலில் நான் பெற்றேன் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

இளவயதில் உங்களைப் பிரிந்து வேலைதேடி வெளிநாடு செல்ல நேரிட்டது. ஐயாவின் இழப்பிற்கும் வந்து கடமைகளை நிறைவேற்ற முடியவில்லையே என்ற மனக் கவலையும் இருந்து கொண்டே இருந்தது.

அம்மா நீங்கள் எனக்கு லஷ்மியை திருமணஞ் செய்து வைத்தீர்கள். உங்களுக்கு தர்ஷன், வர்மினி, வர்மன், தர்ஷினி என நான்கு பேரக் குழந்தைகளை பெற்று பெருமைப்படுத்தினேன்.

நீங்கள் பிரான்ஸ் நாட்டுக்கு வந்தது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. எல்லோருடனும் பாசத்தோடும், அன்போடும் பழகினீர்கள்.

அம்மா திடீரென நேர்ந்த உங்கள் பிரிவு எங்களை தீராத வேதனையைத் தந்துள்ளது. ஐயாவிற்குச் செய்ய முடியாத கடமைகளை எல்லாம் நானும், தம்பி ஜெயாவும், பிரேமாவும் சேர்ந்து செய்யக் கொடுத்து வைத்துள்ளது என்பதை நினைத்து ஆண்டவனுக்கு நன்றி சொல்கிறேன்.

அம்மா... நீங்கள் இன்னும் சிறிது காலம் எங்களுடன் இருந்திருக்கலாம்.... ஏன் அவசரமாகச் சென்றீர்கள்...

**உங்கள் மூத்த மகன் ரவி**

**மருமகள் லஷ்மி, பேரப்பிள்ளைகள்**

**வர்மினி, தர்ஷன், வர்மன், தர்ஷனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மகன் ஜெயாவின் உள்ளத்திலிருந்து...

அம்மா என்றழைக்காத உயிரில்லையே....

என்ன அழகான வரிகளை அமரர் கவிஞர் வாலி அவர்கள் கூறியிருந்தார்கள். உங்கள் கவிதைக்கு நன்றி ஐயா.

நான் நடிக்கும் நாடகத்தில் அம்மா இறப்பதாக ஒரு காட்சி நாடகம் முடிந்து விட்டது. அம்மா எழுந்திருங்கள்... ஏன் எழுந்திருக்க வில்லை? கடவுளே.... இது கனவாக இருக்கக் கூடாதா?

அம்மா உங்களுக்கு ஏதேனும் நோய் வந்து வைத்தியசாலை சென்றால் சில நாட்களில் குணமடைந்து வீடு வந்து சேருவீர்களே... ஏன் இம்முறை எங்களை மறந்து காலனுடன் சென்றுவிட்டீர்கள். என்னால் இந்த அதிர்ச்சியைச் தாங்க முடியவில்லையே அம்மா.

நான் உமாவின் பிரிவால் மிகவும் துயரமடைந்திருந்த போது என்னையும் உங்கள் பேர்த்தி தனுஜாவையும் துன்பத்திலிருந்து ஆறுதலடைவதற்காக பிரான்ஸ்க்கு வந்து எங்களை அரவணைத்து என் கவலைகளை மறக்க வைத்து ஆறுதலளித்தீர்கள். என் தனிமையைப் போக்க சித்திராவை உங்கள் மருமகளாக்கி ஆதரித்து வந்தீர்கள் அம்மா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் எனது கலை ஆற்றலுக்கு எனக்கு உறுதுணையாக இருக்க ஏற்றவாறு கலைக் குடும்பத்தைச் சேர்ந்த சித்திராவை திருமணம் செய்வித்து என்னை பெருமைப்படுத்தினீர்கள். உங்களை எப்படி மறப்பேன் அம்மா.

அம்மா நானும் உங்கள் மருமகளும் பேர்த்தி தனுஜாவும், பேரன் சித்திரகுமாரும் உங்கள் இழப்பினால் தவியாய் தவிக்கின்றோம். நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் ஆசீர்வாதம் எங்களை நல்லவழிப்படுத்தும்.

அம்மா உங்களுக்கு எனது கையால் இறுதிக் கடன்களை செய்தது நான் செய்த புண்ணியம்.

பிரியாமல் ஏங்கும்....

**ஆசை மகன் ஜெயா மருமகள் சித்திரா**

**பேரப்பிள்ளை தனுஜா, சித்திரகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருமை மகள் பிரேமாவின் இதயத்திலிருந்து

அம்மா....

நீங்கள் ஆறு ஆண்பிள்ளைகளைப் பெற்றீர்கள். உங்களைப் போல உங்கள் வம்சத்திற்கு அருமையாகப் பிறந்த பெண் பிள்ளை நான் தானே. என்னை அழகாக அலங்கரித்து உங்களுடனேயே கூட்டிச் செல்வீர்களே. எனக்குப் பெருமை யாக இருக்கிறது அம்மா....

என்னைப் படிப்பித்தீர்கள். உரிய வயதில் உங்கள் மருமகனையே எனக்கு மணம் செய்து பிரான்ஸ் நாட்டில் வாழ வைத்தீர்கள்.

நீங்கள் இங்கு வந்து எங்களது பிள்ளைகளான அனுஷன், லக்ஷன், நிருஷன் என்ற மூன்று பிள்ளைகளுடனும் அன்பு பாராட்டி சீராட்டி வளர்த்தீர்கள்.

அம்மா உங்கள் இறுதிக் காலத்தில் அருகிலிருந்து பார்க்கும் பாக்கியம் கிடைத்ததே என மகிழ்ந்திருந்தேன். ஆனால் உங்கள் இறுதிக் கிரியைகளையே அருகிலிருந்து பார்க்கும்படி செய்து விட்டீர்களே.

அம்மா... நீங்கள் மண்ணோடு மறைந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனத்தில் அழியாத கோலங்களாக இருந்து கொண்டே இருக்கும்.... உங்கள் பிரிவு....வேதனை..... தாங்க முடியவில்லை...

ஏக்கத்துடன்

**பிரேமகி, மருமகன் ரமேஸ்வரன்**

**பேரப்பிள்ளைகள் - அனுஷன், லக்ஷன், நிருஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களை அரவணைத்த

## ஆசை அப்பம்மா..............

அப்பம்மா..... ஆலமரம் போன்ற உங்கள் விழுதுகளாக நான் தான் உங்களுக்குக் கிடைத்த பேரப்பிள்ளை. உங்கள் முழு அன்பும் அரவணைப்பும் உங்கள் மடியில் தவழும் பாக்கியமும் எனக்குத் தான் முதன்மதல் கிடைத்தது நான் செய்த புண்ணியம்.

எனக்கும் எனக்குப் பின்னால் பிறந்த கஜீவன், சஞ்சா, மது எல்லோருக்கும் அன்பையும், பாசத்தையும் அள்ளித் தந்தீர்களே அப்பம்மா 2004ல் நீங்கள் பிரான்ஸ் தேசம் சென்றாலும் அடிக்கடி தொலைபேசியில் பேசி அன்பைச் சொரிந்தீர்களே.

2011ம் ஆண்டும் 2015ம் ஆண்டும் இங்கு வந்தீர்கள். கடைசியாக வந்த பொழுது நீங்கள் சிறிது நோய்வாய்ப் பட்டிருந்தீர்கள். உங்கள் அருகிலிருந்து கவனிக்கும் பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

அப்பம்மா நான் தையல் பழகினேன். என் கையால் உங்களுக்கு சட்டை தைத்து அனுப்பி வைக்க வேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டேன். இடையில் கொரோனாவால் அனுப்ப முடியவில்லை. இது எனக்குப் பெரிய ஏமாற்றம்.

அப்பம்மா உங்கள் பிறந்த நாளுக்கு உங்களுடன் பேசும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வைத்தியசாலையில் இருந்த போது உங்களுடன் பேசியதை என்னால் என்றும் மறக்க முடியாது. உங்கள் குரல் என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது அப்பம்மா.

அப்பம்மா நீங்கள் எனது வாழ்க்கையின் வசந்தங்களை பார்த்துக் களிப்படைய முன் ஏன் எம்மையெல்லாம் அழவைத்து வெகு தூரம் பிரிந்து சென்றீர்கள். உங்கள் நினைவுகள் எம்மை வாட்டி வதைக்கின்றதே அப்பம்மா...

**பேர்த்தி கஜீவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் பேசுகிறது

### அன்புள்ள அப்பம்மா..................

நான் பிறந்து 2½ வயதிலேயே நீங்கள் பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று விட்டீர்கள். அதனால் உங்கள் அணைப்பும், பாசமும் எனக்கு முழுமையாகக் கிடைக்கப் பெறாததையிட்டு மிகவும் வருந்துவேன். நீங்கள் தொலை பேசியில் என்னுடன் கதைக்கும் பொழுது எனக்கு அளப்பரிய சந்தோஷமாக இருக்கும்.

2011ம் ஆண்டில் உங்களை நேரில் சந்தித்தபோது மது எப்பிடி இருக்கிறாய்? எனக் கேட்டு என்னைக் கட்டியணைத்து முத்தம் தந்தீர்களே. என் கண்முன் அக் காட்சி இப்பொழுதும் நிழலாடுகிறது.

பின்பு 2015ம் ஆண்டு எனது பூப்புனித நீராட்டு விழாவிற்கு வந்தீர்கள் எங்களுடன் அன்பாக இருந்து எங்களுக்குப் பல அறிவுரைகளைக் கூறி பாசமழை பொழிந்தீர்கள். ஏனோ நீங்கள் திரும்பி பிரான்ஸ் செல்லும் போது மனம் கலக்கமாகவும், கவலையாகவும் இருந்தது. இதுதான் உங்களை கடைசியாகப் பார்ப்போமென்று எதிர்பார்க்கவில்லை அப்பம்மா.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பம்மா நீங்கள் சுகவீனமுற்று வைத்தியசாலையில் இருந்த போது நேரலையாக தொலைபேசி மூலம் உங்கள் முகத்தை பெரியப்பா காட்டிய போது மிகவும் வேதனையாக இருந்தது. எங்களுடன் கதைத்தீர்கள்.

ஏன் அப்பம்மா எங்களைத் தவிக்க விட்டுச் சென்றீர்கள். இன்னும் சில காலமாவது எங்களுடன் வாழ்ந்து எமக்கு வழிகாட்டியாய் இருந்திருக்கலாமே அப்பம்மா...... கலங்குகிறோம்.

**அன்புப் பேர்த்தி**

**மதுமிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன் ஆன்மா அடைக சாந்தி....

திருமருவும் ஈழவள நாட்டில்
திலகமென விளங்கும் - யாழ் நகரின் கண்ணே
வடபால் அமைந்த வளமிகு ஊராம்
வண்ணமிகு கலைஞர், கவிஞர்கள்
வித்தகர்கள், வர்த்தகர்கள் - எனப்
பற்பலரும் பண்புடனே
தத்துவமாய் வாழ்ந்த
தனித்துவமான மண்
ஆலயங்கள் புடை சூழ
அழகொளிரக் காட்சிதரும்
அளவெட்டியூரில் ஆனந்த வாழ்வமைந்த
உத்தம மாமனிதன் சித்திர நற்கலைஞன்
உருத்திரமூர்த்திக் குருக்கள் எனும்
சத்தியத் திருநாமம் கொண்டோன்
பத்தினியாள் நாகேஸ்வரி அம்மையாரை
காதலினால் கைப்பிடித்தே காவிய நல்வாழ்வினிலே
ஏழுபிள்ளைச் செல்வங்கள் ஏற்றமுடன் பெற்று
ஆண் மக்கள் அறுவருடன் ஆருயிராய்ப் பெண்மகளாம்
நாகேஸ்வரி அம்மையவர் பண்பான இன்மகனாம்
பாடசாலை நண்பன் சுகாஜனனின்
பரிவான தாயாரே பாசத்தின் சுடரொளியே
தேச சுகம் கண்டு தெய்வபலம் கொண்டு
பூதலத்தில் பூரிப்புடன் புதுப் பொலிவுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாடி மகிழ்ந்து
கற்றோரும், மற்றோரும் மெச்சிடும் பெண்ணாக
மேதினியில் மேன்மையுடன்
ஏழ்பத்து ஏழாண்டு இப்புவியில் ஒப்புயர்வாய் வாழ்ந்து
தொல்லையிலும் பிறவி நீங்கி
அல்லல் அறுத்து ஆண்டு கொண்டோன்
பாதார விந்தங்களில்
ஆதாரம் அடைந்தீர்கள்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**இவ்வண்ணம்**

**அன்பன் செ. நேமிநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூக்களும் பலன்களும்

தெய்வ வழிபாட்டின் போது ஒவ்வொரு தெய்வத்திற்கும் பிடித்தமான பூக்களை வைத்து வணங்குகிறோம். இதனால் கிடைக்கும் பலன்கள்

| | | |
|---|---|---|
| செவ்வந்தி | - | குரு (வியாழன்) கிரகப்பீடை நீங்கும் |
| சிவப்பு அரளி | - | குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். |
| நீல சங்கு புஷ்பம் | - | சனி பகவானின் அருள் கிடைக்கும் |
| வெண் தாமரை | - | நிம்மதியான வாழ்வை ஏற்படுத்தித் தரும் |
| செந்தாமரை | - | செல்வம், ஆயுள் மற்றும் சூரியபகவானின் அருள் கிடைக்கச் செய்யும் |
| பொன் அரளி | - | பெண்களின் திருமணப் பேச்சுவார்த்தை ஏற்படச் செய்யும் |
| மஞ்சள் அரளி | - | கடன் தொந்தரவுகளை நீக்கும் |
| ரோஜாப்பூ | - | உடலுக்கும் உள்ளத்திற்கும் பலத்தை ஏற்படுத்தித் தரும். |
| பாரிஜாதம் | - | பக்தியைத் தரும் |
| அல்லிப்பூ | - | அதிர்ஷ்டத்தை வழங்கும் |
| மல்லிகை | - | கண்பார்வையைக் குணப்படுத்தும் |

## திரிகளும் பயன்களும்

1. பஞ்சுத்திரி - சர்வமங்களம் நிலை நிலைக்கச் செய்யும்.
2. தாமரைத் தண்டுத் திரி - செல்வத்தை நிலைக்கச் செய்யும்.
3. வாழைத்தண்டுத் திரி - மனச்சாந்தி ஏற்படச் செய்யும்.
4. வெள்ளை எருக்கலம் பட்டை திரி - அதிக செல்வம் சேரச் செய்யும்
5. புதிய சிவப்புத் துணி - திருமணத் தடை நீங்கும்
6. வெள்ளைத் துணி - குடும்பத்தின் வளம் பெருகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெய் வகைகளும் அதனால் கிடைக்கும் பலன்களும்

1. தேங்காய் நெய் - இதன் மூலம் ஆலயங்களில் தீபம் ஏற்றினால் நம் வீட்டில் மங்களம் பெருகும். நாடும் நலமும் வளமும் பெற்று வாழலாம்.
2. நல்லெண்ணெய் - தேங்காய் நெய்யால் ஒரு கோடி தீபமிடடதன் பலன் இதன் மூலம் கிடைக்கும்.
3. பசுநெய் - இதன் மூலம் தீபம் ஏற்றினால் ஒரு கோடி நல்லெண்ணயினால் தீபம் ஏற்றயதற்குச் சமன்
4. இலுப்பெண்ணெய் - இதன் மூலம் ஒரு தீபம் ஏற்றினால் பசுநெய் மூலம் ஆயிரம் தீபம் ஏற்றியதற்குச் சமன்.

## நெய், தேன், தைலம் போன்றவற்றின் பலன்கள்

சிவனுக்கு நெய் அபிடேகம் செய்தால் ஆயிரம் கோடி வருடங்களில் செய்த மகா பாவங்கள் நீங்கும் ஒரு மாத காலம் நெய் அபிடேகம் செய்தால் இருபத்தியொரு தலைமுறை உள்ளாரும் சிவபதத்தை அடைவார்.

தைலத்தால் அபிடேகம் செய்தால் அலங்காரம் செய்யப் பட்ட அளவில்லாத பசுக்களைத் தானம் செய்த பலன் கிடைக்கும்.

தயிர் அபிடேகம் செய்தால் எல்லாப் பாவங்களும் நீங்கி முடிவில் சிவபதம் கிடைக்கும்.

தேன் அபிஷேகத் செய்தால் எல்லாப் பாவங்களும் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிஷேக திரவியங்களும் அதன் பலன்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | சுத்த ஜலம் | - | சாந்தி தரும் |
| 2. | வாசனைப் பொருள் | - | மல நிவாரணம் |
| 3. | வாசனைத் திரவியங்கள் | - | ஆயுள் வலிமை தரும் |
| 4. | தைலம், எண்ணெய் | - | சுகத்தைத் தரும் |
| 5. | சந்தணக் குழம்பு | - | செல்வத்தைத் தரும் |
| 6. | பால் | - | ஆயுள் விருத்தி |
| 7. | தயிர் | - | புத்திர பாக்கியம் |
| 8. | நெய் | - | மோட்சம் |
| 9. | தேன் | - | இசை ஞானம் |
| 10. | கரும்புச் சாறு | - | நித்திய சுகம் |
| 11. | வாழைப்பழம் | - | பயிர் விருத்தி |
| 12. | பலாப்பழம் | - | மக்கள் ஆதரவும் அன்பும் |
| 13. | சர்க்கரை | - | சத்துரு நாசம் |
| 14. | மாம்பழம் | - | சகல நன்மை |
| 15. | மாதுளம் பழம் | - | பகைவர் கேடு |
| 16. | தோடம்பழம் | - | பூமி இலாபம் |
| 17. | நாரத்தம் பழம் | - | நற் புத்தி |
| 18. | இளநீர் | - | சந்தான விருத்தி |
| 19. | விளாம்பழம் | - | சோக நிவர்த்தி |
| 20. | பச்சைக் கற்பூரம் | - | பயமின்மை |
| 21. | கோரோசனை | - | ஆயுள் பலம் |
| 22. | கஸ்தூரி | - | காரிய சித்தி |
| 23. | பன்னீர் | - | குளிர்மை |
| 24. | அன்னம் | - | ஆயுள் ஆராக்கியம் |
| 25. | பஞ்சகௌவியம் | - | ஆன்ம சுத்தி |
| 26. | பஞ்சாமிர்தம் | - | செல்வச் சிறப்பு |
| 27. | பேரீந்து, முந்திரிகை | - | உளத் தூய்மை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. விபூதி - நோய் நிவாரணம்
29. குங்குமம் - மனச் சந்தோஷம்
30. மஞ்சள் நீர் - இல்லச் சிறப்பு
31. பூரண கும்ப அபிஷேகம் - இறையருள்
32. சங்காபிஷேகம் - தர்ம அர்த்த காமிய மோட்சம்

## பழங்களின் பயன்கள்

**திராட்சைப் பழம் :**

பித்தக் கோளாறு, மலச்சிக்கல், வாதம், உடற் சூடு, வாய் நாற்றம், தொண்டைப்புண் போன்றவற்றைக் குணமாக்கும். கை, கால், மூளை போன்றவை பலமடையும். முகம் அழகு பெறும்.

**எலுமிச்சம் பழம் :**

வாந்தி, மயக்கம், பித்தம், வயிற்றுப்புண், வாயுக் கோளாறு மூலக்குத்து, வயிற்றுப் போக்கு, இருமல், சிறுநீரக நோய், வயிற்றுவலி, வாய்நாற்றம், பல் ஆட்டம், தூக்கமின்மை, கண்நோய் போன்றவற்றை நீக்கும்.

**நாவற் பழம் :**

நீரிழிவு, வயிற்றுப்புண், வாய்ப்புண், வாய் நாற்றம், இருமல், வாய்வு, சிறுநீரகக் கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும். கடுத்தல், சீதவாத நோய் உள்ள போது விலக்க வேண்டும்.

**பேரீச்சம்பழம் :**

மலக்கட்டு, களைப்பு, தொண்டைக்கட்டு, பக்கவாதம் போன்றவற்றை தணிக்கும் மூளை, எலும்பு, தசை போன்ற வற்றை வலுப்படுத்தும் இளைப்பு, மூட்டு, வலி, உடம்பு அசதி ஏற்படாமல் தடுக்கும் ஆஸ்மா நோயாளிக்கு நல்லது. மூல நோயாளிக்கு ஆகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பப்பாளிப்பழம் :**

மலக்கட்டு, கண்நோய், வாய் நாற்றம், தொண்டைப் புண், வயிற்றுப்புண், மல சம்பந்தமான கோளாறுகள், கர்ப்பம் தொடர்பான நோய்கள் என்பனவற்றைக் குணமாக்கும் யானைக்கால் வீக்கம் குறையும், உடம்பு, மூளை வலிமை பெறும். ஆண்மை, பெண்மை நிறையும் நோய் எதிர்ப்பு சக்தியை உண்டு பண்ணும்.

**மாம்பழம் :**

மலக்கட்டு, மலட்டுத்தன்மை, சொறி, சிரங்கு, முகவரட்சி, வாய் நாற்றம், சிறுநீர்க்கல், பற்கோளாறு போன்றவற்றைக் குணப்படுத்தும். உமிழ் நீரைச் சுரக்கச் செய்வதுடன் மூளை இதயம் பலமடையும். ஆண்மை, பெண்மை மிகுதியாகும்.

## சில பயனுள்ள மருத்துவ குறிப்புகள்

1. **வெந்தயம் :**

வெந்தயம் உணவை ஜீரணம் அடையச் செய்கின்றது. வாய்வுத் தொல்லையையும் நீக்கும்.

2. **சீரகம் :**

இதனை போசனைக் குடோரி என்று கூறுவர். சமிபாட்டைச் சீராக்குவதனால் சீரகம் எனப் பெயர் பெற்றது. இது அஜீரணம், பசியின்மையைப் போக்கும் உடலுக்குக் குளிர்ச்சியையும் தரும். சீரகத்துடன் திப்பிலியையும் சேர்த்துப் பொடிசெய்து தேனில் குழைத்து அருந்த விக்கல் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. மிளகு :

உணவில் காரம் சேர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும். இது நாக்கில் காரமாக உணர்ந்தாலும் உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். பசியைத் தூண்டும். சளி, இருமல் என்பவற்றைப் போக்கும் கிருமிகளை அழிக்க வல்லதுடன் நச்சுத் தன்மையையும் போக்கும் இதனால் பசும்பால் கெட்டுப் போகாமல் இருப்பதற்கு பாலில் சிறிது மிளகைப் போட்டு வைப்பார்கள்.

### 4. கடுகு :

உணவு சுவையூட்டுவதற்கு தாளிதம் செய்து உணவில் சேர்ப்பார்கள். வயிற்றுப் பொருமல், குடல் இரைச்சல் என்பன நீங்கும். உணவு கெடாமலும் பாதுகாக்கும். கடுகை அரைத்து நீரில் கலக்கிக் கொடுக்க நஞ்சு உண்டவர்களுக்கு வாந்தி உண்டாகி வெளிவரும்.

### 5. பெருஞ்சீரகம் :

உணவில் வாசனைக்காகவும், கறிமசாலாவிலும் பயன்படுத்தப்படும். இது சூதக வாயுவைக் கட்டுப்படுத்தும் செரியாமை, வயிற்றுப் பொருமல் என்பவற்றை நீக்கும்.

### 6. கொத்தமல்லி :

மல்லி மல்லித்தூளிலும், கோப்பித்தூளிலும், மிளகாய்த் தூளிலும் இரசம் வைக்கும் பொழுதும் உணவில் சேர்க்கப் படுகிறது. உடலுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும். மலச் சிக்கலை போக்கும். பசியைத் தூண்டும் உணவை ஜீரணமடைய செய்யும். கொத்தமல்லி ஊறல் குடிநீர் கொடுக்க குழந்தைகளின் மாந்தம் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீரை வகைகளின் பலன்கள்

### 1. கறிவேப்பிலை :

உணவில் வாசனைக்காகவும், சுவையூட்டவும் பயன்படுத்தப்படும். அஜீரணம், மாந்தம் ஆகியவற்றைப் போக்கும் இரத்த விருத்தியை ஏற்படுத்தும். தலைமயிர் கறுத்து வளர்வதற்கும் உதவும்.

### 2. தூதுவளை :

இதனைப் பச்சடி, ரசம் செய்து சளி, இருமலுக்கு உணவில் சேர்ப்பார்கள். சளி, இருமல், காய்ச்சல் போன்றவற்றிற்கு கொத்தமல்லி, நற்சீரகம், மிளகு, கற்பூரவள்ளி, தூதுவளை என்பனவற்றை குடிநீராக அவித்துக் குடிக்கலாம்.

### 4. வட்டத் துத்தி :

இலைகளை எண்ணையில் வதக்கி அல்லது சுண்டல் செய்து உண்ணலாம். இது மூலரோகத்தை போக்கவல்லது. (கை கண்டது)

### 5. சிறு குறிஞ்சா :

சுண்டல், அல்லது பச்சடி செய்து சாப்பிட இரத்தத்திலுள்ள குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்தும். மாதவிடாயில் அதிக இரத்தப் போக்கு ஏற்படின் அரிசிமாவுடன் சேர்த்து பிட்டாக அவித்துச் சாப்பிட இரத்தப்போக்கு நிற்கும்.

### 6. அகத்தி :

இலை, பூ, சமையலுக்குப் பயன்படுத்தப்படும். ஏனைய இலை வகைகளுடன் சுண்டல் செய்து சாப்பிடலாம். குழம்பு, பாற்சொதி செய்தும் உண்ணலாம். இதனால் வாய் அவியல், குடற்புண் என்பன மாறும். இரும்புச் சத்து உள்ளதால் இரத்தச் சோகை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத் தலைவியின்

வாழ்வின் போதும்

மறைவின் போதும்

தம் அன்பினை

பல வகையிலும் வெளிப்படுத்தியோருக்கும்

ஆறுதல் அளித்தோர்க்கும் அவரின்

ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்தோருக்கும்

எமது நெஞ்சார்ந்த நன்றி

அனைவருக்கும் இறை ஆசி கிடைக்கட்டும்!

**நன்றியுடன்**

**குடும்பத்தினர்.**



**சிவதயா அச்சகம்**

***92(150)* நாவலர் வீதி, யாழ்ப்பாணம். *0773965214***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்து எழுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலைதந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

- பட்டினத்தடிகள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org